**வாக்காளர் பதிவு மற்றும் வாக்காளர் இடாப்பு மீளாய்வு 2021**

**தகைமையுடைய அனைத்து உள்வாங்கப்பட்ட வாக்காளர் இடாப்பைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்போம்**

1. நிலவுகின்ற கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களை கணக்கெடுக்கும் படிவங்கள் வீடு வீடாக வழங்கப்படவில்லை.

2. ஆனாலும் தங்களுடைய பெயர் 2020 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் குறித்த முகவரியின் கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான பதிவையும் மேற்கொள்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக எந்தவொரு படிவமும் பூர்த்தி செய்யத் தேவையில்லை.

3. மேலும் 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது நீக்கப்படும் மற்றும் புதிதாக உட்சேர்க்கப்படும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் 2021 ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 2021 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வரைக்கும் அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. அதற்கமைய, தங்களுக்குரிய கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்குச் சென்று வாக்காளராகப் பதிவு செய்வதற்காக தங்களையும் தங்களுடைய குடும்ப உறுப்பினர்களையும் சிபார்சு செய்யப்பட்டுள்ளனவா? எனத் தேடிப் பார்க்கவும். www.elections.gov.lk எனும் இணைத்தளத்தின் மூலமாகவும் பார்வையிடலாம்.

5. தங்களுடைய பெயரோ அல்லது குடும்ப உறுப்பினர்களின் பெயரோ சிபார்சு செய்யப்பட்டிருக்காவிடின் அதற்காக உரிமைக்கோரிக்கை விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கோ அல்லது உட்சேர்க்கப்பட்டுள்ள பெயர் தொடர்பாக ஆட்சேபனையோ இருப்பின் அதற்கான ஆட்சேபனையை சமர்ப்பிக்க முடியும்.

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

6. இவ் உரிமைகள் மற்றும் ஆட்சேபனைகள் படிவத்தை தங்களுடைய கிராம உத்தியோகத்திரமோ அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ள முடிவதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

7. அவ்வாறே இதுவரை தாங்கள் பதிவு செய்யப்படாமல் இருப்பின் www.elections.gov.lk இணையத்தளத்தின் மூலம் 2021.11.17 திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்வதற்காக மெய்நிகர் (Online) வழியாக விண்ணப்பிக்க முடியும்.

அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களிடமுள்ள இறைமை அதிகாரத்தை வாக்கு அதிகாரத்தின் மூலமே உண்மையாகவே நடைமுறைப்படுத்த முடியும் என்பதால், வாக்காளர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருத்தல் கட்டாய தேவையாகும் என்பதை ∴பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

வாக்காளர் பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்படல் மற்றும் வாக்கைப் பயன்படுத்துதல் பிரஜைகளின் உரிமையாவதுடன், பொறுப்புமாகும். தயவுசெய்து தங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள், அயலவர்கள், பணியிடத்து நண்பர்களையும் தெளிவுபடுத்தவும். இது தொடர்பாக தங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் ∴பவ்ரல் அமைப்பு தங்களுக்கு உதவி புரிவதற்காக நிறுவப்பட்டுள்ள வசதியளித்தல் நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.

தமிழ் மொழியில் : 011 2558574
தொலைநகல் : 011 2558572

நன்றி

றோஹன ஹெட்டியாராச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்